மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.94/2020</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 10ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.10.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் வாதி முத்துலட்சுமி எனது தாயார் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் தாயார் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் உடல்நிலை சரியில்லாததால் அவர் வரவில்லை என் தாயார் உடல் நலம் சரியில்லாமல் உள்ளார் என்பதற்கான மருத்துவ ஆவணங்கள் எதையேனும் நான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை ஆவணங்கள் உள்ளது. என் தாயார் நல்ல மனநிலையில் இருந்து வருகிறாரா என்றால் இல்லை அடிக்கடி அது மாறிவிடுகிறது. எவ்வளவு நாட்களாக மனநிலை சரியில்லாமல் உள்ளார் என்றால் ஒரு வருடமாக உள்ளார் சில நேரம் நல்ல மனநிலையில் இருப்பார் சில நேரம் இருக்க மாட்டார்.

2. என் தாயார் மனநிலை சரியில்லாமல் உள்ளதாக நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் என் தாயார் பெயரில் தான் உள்ளது என்றால் ஆமாம். அதன் அனுபவ சுவாதீனம் பற்றி என் தாயாருக்கு தான் தெரியும் என்றால் இல்லை எனக்கும் தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வாதி எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனக்கு உறவினர் அல்ல. தாவா சொத்துக்கள் வாதியின் தாயாரின் தகப்பனாரான பெரியசாமி கவுண்டர் என்பவருக்கு 21.07.1986 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

3. தாவா சொத்தின் காலை எண் நான் கிரயம் பெற்றபோது 902–ஏ ஆக இருந்தது என்றால் சரிதான். தற்போது அது உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது என்றால் ஆமாம். தாவா பெரியசாமி கவுண்டருக்கு பாகப்பிரிவனையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 77 சென்ட் என்றால் சரிதான். பெரியசாமி கவுண்டர் உயிரோடு இருந்தபோதே தனக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் மேற்கோட்டு பகுதியை ஒரு ஈரோட்டில் சேர்ந்த கே.சி.சம்பத்குமார் என்பவருக்கு கிரயம் கொடுத்து விட்டாரா என்றால் ஆமாம்.

4. அவர் கிரையம் கொடுத்தது போக மீதி உள்ள சொத்துகளுக்கு வடபுறம் கரூர் முதல் திருச்சி செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழப்புறம் கல்லமடை செல்லும் தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். மொத்த பாகத்திற்கு தெற்கோட்டில் பிஏபி வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கே.சி.சம்பத்குமார்

என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்த சொத்திற்கு கிழப்புறமாக பெரியசாமி கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த பூமியில் கரூர் முதல் திருச்சி சாலைக்கு தென்புறமாகவும், கல்லமடை ரோட்டிற்கு மேல் புறமாகவும், சம்பத்குமார் இடத்திற்கு கிழப்புறமாகவும், பழனிச்சாமி கவுண்டர் பாகத்திற்கு வடபுறமாகவும், எனக்கு 38 சென்ட் நிலம் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

5. மேற்படி 38 சென்ட் பூமியை பொறுத்து இந்த வழக்கிற்கு பின்னிட்டு நான் வருவாய் துறையில் உட்பிரிவு செய்து கொண்டேன் என்றால் இல்லை. வழக்கிற்கு முன்பே உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் என் வசம் உள்ளது தாக்கல் செய்கிறேன். பெரியசாமி கவுண்டர் என்பவர் 23.01.1997 இல் இறந்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. பெரியசாமி கவுண்டருக்கு தேவாத்தாள் என்ற மனைவி உள்ளார் என்றால் ஆமாம்.

6. மேற்படி தேவாத்தாள் என்பவருக்கு வாதியின் தாயார் மட்டும் ஒரே மகள் என்றால் அது எனக்கு தெரியாது. எனது பூமிக்கு தென்புறத்தில் 1 ஏக்கர் 19 சென்ட் பூமியை 3ம் பிரதிவாதி பழனிச்சாமி என்பவர் கிரையம் பெற்றாரா என்றால் ஆமாம். மூன்றாம் பிரதிவாதி கிரயம் கொடுத்தது போக மீதி பூமிகள் தெற்கோட்டில் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. எங்கள் பூமியில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை. நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்ய வாதி மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தார் என்றால் சரிதான்.

7. அப்போது நானும் உடனிருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடத்திற்கு நான் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தாவா காலையில் 13-1/2 செண்ட் பூமி ஆக்கிரமிப்பில் இருப்பதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் சொல்லி உள்ளார் என்றால் எனது பூமியில் அது இல்லை என்பதால் நான் அதை பொறுத்து எந்த ஆட்சேபணையும் போடவில்லை. என் தாயார் கிரயம் பெற்ற சொத்தில் 10 செண்ட் பூமியை 2ம் பிரதிவாதி சுசீலா என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றபோது தாவா சொத்தின் வடபுறம் இருவழிச்சாலை இருந்து தற்போது நான்கு வழிச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது என்றால் சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது அது மட்டும் தான் தெரியும்.

8. வாதி சிவக்குமார் திருப்பூரில் தொழில் செய்து கொண்டு அங்கு தங்கி உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. நான்கு வழிச்சாலையை ஒட்டிய தாவா சொத்து உள்ளதாலும் தற்போது அதன் மதிப்பு உயர்ந்து விட்டதாலும் நானும் மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து தாவா சொத்தையும் சேர்த்து கம்பி வேலி போட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதுபோல் நாங்கள் எந்த கம்பிவேலியும் அமைக்கவில்லை என்னுடைய 38 செண்ட் பூமிக்கு மட்டும்தான் நான் கம்பி வேலி அமைத்துள்ளேன்.

9. தாவா சொத்தின் நான்கு புறங்களிலும் கம்பி வேலி உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எனது சொத்தில் மட்டும் தான் கம்பி வேலி உள்ளது. பெரியசாமி கவுண்டரின் அக்கா பெயர் எனக்கு

தெரியாது. பெரியசாமி கவுண்டர் என்பவரின் அக்கா மகள் தான் முத்துலட்சுமி என்றால் எனது தாயார் பெயர் முத்துலட்சுமி என்பது மட்டும்தான் எனக்கு தெரியும். என் தாயாரின் தாயார் பெயர் என்ன என்றால் அது எனக்கு தெரியாது. என் தாயாரின் தாயார் எனக்கு பாட்டி உறவு முறை என்றால் ஆமாம்.

10. நான் 29 வருடங்களாக ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் தாயாரின் தாயார் பெயரை சொன்னால் அது இந்த வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் தெரியாது என்று மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரின் தாயாரும், பெரியசாமி கவுண்டரும் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் என்றால் அது எனக்கு தெரியாது. நானும் மற்ற பிரதிவாதிகளும் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களையும் சேர்த்து கம்பி வேலிஅமைத்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு குறித்து தெளிவாக காட்டி உள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

11. தாவா சொத்து தெற்க்கோட்டிலும் நான் கிரயம் பெற்ற சொத்தானது தேசிய நெடுஞ்சாலை ஒட்டி வடகோட்டிலும் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று நான் எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ள நிலையில் வாதியின் சொத்தை கைப்பற்ற தான் நான் இந்த வழக்கில் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி இந்த வழக்கு தீர்ப்பாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.10 18:45:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்